நாமக்கல் மாவட்டம்

N

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2019

## ஒன்பதாம் வகுப்பு

## தமிழ்

(செய்யுள்,உரைநடை, இலக்கணம் ,கட்டுரை)

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள்:50

பிரிவு - I

பகுதி - அ

I .உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 4 x 1 = 4

1) தமிழ்விடு தூது ______ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது
(அ) தொடர்நிலைச் செய்யுள் (ஆ) புதுக்கவிதை
(இ) சிற்றிலக்கியம் (ஈ) தனிப்பாடல்

2) திராவிடம் என்னும் சொல்லை முதன் முதலில் குறிப்பிட்டவர் ______
(அ) ஹீராஸ் பாதிரியார் (ஆ) ச. அகத்தியலிங்கம்
(இ) குமரில பட்டர் (ஈ) வில்லியம் ஜோன்ஸ்

3) படித்தாய் என்பது ______
(அ) வினைப்பயனிலை (ஆ) தோன்றா எழுவாய்
(இ) வினைப் பயனிலை (ஈ) வினாப் பயனிலை

4) பார் என்பது ______ வினையாகச் செயல்படுகின்றது .
(அ) முதல்வினை (ஆ) துணை வினை
(இ) தனிவினை (ஈ) முதல்வினை துணைவினை

பகுதி - ஆ

. கோடிட்ட இடத்தை நிரப்புக : 3 x 1 = 3

5) தமிழின் வண்ணங்கள் ______ ஆகும்
6) உணவு தந்தவர் ______ தந்தவர் ஆவர்.
7) மழை பெய்யப் போகிறது என்பது ______ வினை .

பகுதி - இ

. பொருத்துக : 3 x 1 = 3

8) புறநானூறு - தேன்
9) முன் + ஏறு - குடபுலவியனார்
10) வேரி - இடை + வினை

பிரிவு - II

அடிபிறழாமல் எழுதுக.- 4 x 1 = 4

11) காடெல்லாம் .......... எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடலை எழுது

பிரிவு - III

கீழ்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடைதருக 3 x 2= 6

12) கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களைத் தருக .
13) முது மொழிக்காஞ்சித் துறை - பற்றிக் குறிப்பு வரைக .
14) " கூவல் " என்று அழைக்கப்படுவது எது ?
15) வீணையோடு வந்தாள் , கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக .
16) முதல்வினையும் துணை வினையும் - விளக்குக .

பகுதி - ஆ

கீழ்காணும் வினாக்களுக்கு எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி 2 x 4 = 8

17) காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது ?
18) பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை ?
19) பெயரடை சான்று தந்து விளக்குக ?
20) சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது ?.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி - இ

**கீழ்காணும் வினக்களுக்கு விடையளிக்க :** 1 X 6 = 6

21) தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்தெழுதுக.

பிரிவு - IV

பகுதி - அ

22) நயம் பாராட்டுக. 1 X 4 = 4

விரிகின்ற நெடுவானில் , கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில் , பள்ளத்தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில் , காட்டில்
புல் வெளியில் , நல்வயலில் , விலங்கில் , புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே , தூய்மை ஊற்றே,
அழகு என்னும் பே ரொழுங்கே , மெய்யே , மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே !

- ம. இலெ . தங்கப்பா

பிரிவு - V

**கீழ்காணும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு அரைபக்க அளவில் விடையளிக்க :** 1 X 6 = 6

23) நீ வாசித்த நூல் குறித்து மதிப்புரை எழுதுக.

(அல்லது)

கற்றுச் சூழலைப் பேணிகாக்கும் பள்ளியாக உமது பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

பிரிவு - VI

**கீழ்காணும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி :** 1 X 6 = 6

24) வளரும் செல்வம் என்ற தலைப்பில் ஆசிரியர் கூறும் கருத்துகள்யாவை ?

(அல்லது)

தண்ணீர் என்ற கதையை சுருக்கி வரைக .

*********

# ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

NEET , JEE AND BOARD EXAM பயிற்சி மையம்,
SBM பள்ளி வளாகம், திருச்சி மெயின் ரோடு, நாமக்கல்
அலைபேசி : 99655-31727, 94432 - 31727


## முதல் இடைப்பருவத் தேர்வு – ஜூலை 2019

## ஒன்பதாம் வகுப்பு - தமிழ்

(செய்யுள், உரைநடை, இலக்கணம், கட்டுரை)

மொத்த மதிப்பெண்கள் : 50

## விடைக்குறிப்பு

### பிரிவு - I

| | | |
|---|---|---|
| | பகுதி – அ<br>உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக | 4x1=4 |
| 1 | இ) சிற்றிலக்கியம் | 1 |
| 2 | இ) குமரிலபட்டர் | 1 |
| 3 | ஆ) தோன்றா எழுவாய் | 1 |
| 4 | ஈ) முதல்வினை துனைவினை | 1 |
| | பகுதி - ஆ<br>கோடிட்ட இடத்தை நிரப்புக | 3x1=3 |
| 5 | நூறு | 1 |
| 6 | உயிரை | 1 |
| 7 | துணைவினை | 1 |
| | பகுதி - இ<br>பொருத்துக | 3x1=3 |
| 8 | புறநானூறு - குடபுலவியனார் | 1 |
| 9 | முன்+ஏறு - இடை +வினை | 1 |
| 10 | வேரி - தேன் | 1 |
| | பிரிவு – II<br>அடிபிறழாமல் எழுதுக | 4x1=4 |
| 11 | பெரியபுராணம்<br>காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு<br>மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை<br>கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன<br>நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்.<br>- சேக்கிழார் | 4 |
| | பிரிவு – III<br>கீழ்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடைதருக. | 3x2=6 |
| 12 | கணினி சார்ந்த ஐந்து தமிழ்ச்சொற்கள்:<br>லேப்டாப் - மடிக்கணினி<br>ப்ரௌசர் - உலவி<br>கர்சர் - ஏவி அல்லது சுட்டி<br>சர்வர் - வையக விரிவு வலை வழங்கி<br>நேவி - நாவாய்<br>கலயுகோய் - கலன் | 2 |

| | | |
|---|---|---|
| 13 | **முதுமொழிக்காஞ்சித் துறை:**<br>அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளினது உறுதி தரும் தன்மையைக் கூறுதல் | 2 |
| 14 | **"கூவல்" என்றழைக்கப்படுவது:**<br>'கூவல்' என்று அழைக்கப்படுவது உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலையாகும். | 2 |
| 15 | **தொடர் வகை:**<br>**வீணையோடு வந்தாள்** - ஒடு என்ற வேற்றுமை உருபு பெற்று வந்தமையால் இது வேற்றுமைத் தொடர்<br>ஆ) **கிளியே பேசு** - விளித்தொடர் | 1<br>1 |
| 16 | **முதல்வினையும் துணைவினையும் :**<br>**முதல் வினை:** ஒரு கூட்டுவினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத் தரும்வினை முதல்வினை எனப்படும்.<br>எ.கா. புத்தகம் மேசையில் இருக்கிறது.<br>**துணைவினை:** முதல் வினைக்குத் துணையாக வேறு இலக்கணப் பொருளை தரும் வினைகள் துணைவினைகள் எனப்படும்.<br>எ.கா. நான் மதுரைக்குப் போயிருக்கிறேன். | 1<br>1 |
| | **பகுதி - ஆ**<br>**கீழ்க்காணும் வினாக்களுக்கு எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி** | |
| 17 | **காலந்தோறும் தமிழ்மொழி தன்னைப் புதுப்பித்துக்கொள்ளும் விதம்:**<br>♣ நம் தமிழ்மொழி, முன்னைப் பழைமைக்குப் பழைமையும், பின்னைப் புதுமைக்குப் புதுமையும் கொண்டது.<br>♣ திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழியாகத் திகழ்கின்ற தமிழ், பிற திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது.<br>♣ மூலத்திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும் பேணிப் பாதுகாத்து வருகின்றது.<br>♣ தன் தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்கி வருகிறது.<br>♣ தமிழ்மொழி காலப் புதுமையைப் பெறத்தக்க வல்லது. கணினிப் பயன்பாட்டிற்கும் ஏற்றதாய் அமைந்துள்ளது. | 1<br>1<br>1<br>1 |
| 18 | **பட்டமரத்தின் வருத்தங்கள்:**<br>பட்டுப்போன மரமொன்று கவிஞர் (தமிழ் ஒளி) ஒருவரின் உள்ளத்தில் ஏற்படுத்திய குமுறலாக இக்கவிதை அமைந்துள்ளது.<br>**முற்றும் இழந்தாயே**<br>♣ இலைகளற்ற மொட்டைக் கிளைகளோடு , வெட்ட ஒருநாள் வரும் என்று வருத்தமடைந்தது மரம்.<br>♣ நிழல் தரக்கூடிய இலைகளும் மணம் தரக்கூடிய மலர்களும் கூரை போன்று விரிந்திருக்கும் கிளைகளும் வெந்து கருதியதால் இந்த நிலை வந்ததோ!<br>♣ பட்டுக் கருகியதால் கட்டை என்னும் பெயர் கிடைத்ததோ.<br>♣ காய்ந்த மரப் பட்டைகளெல்லாம் என்னை விட்டுப் பிரிந்ததால் முற்றும் இழந்தவனாகினேன், என்று புலம்பியது. | 1<br>1 |

| | | |
|---|---|---|
| | **வெறுங்கனவே**<br>♣ கலங்கிய மனிதர்கள் உன்னிடம் வருகையில் கைநீட்டி அவர்களை அணைத்தாயே!<br>♣ பறவைகள் எல்லாம் உன்னில் கூடிக் கானம் பாடி வரும் அழகே அழகாகவும்,<br>♣ விண்ணில் பனித்துளி உன் இலை கிளைகளையும் ஊடுருவி மண்ணை நனைத்ததோ!<br>♣ காற்றில் ஆடும் கிளைகளில் சின்னக் குழந்தைகள் ஏறிக் குதிரைச் சவ்வாரி செய்தனரே!<br>♣ இத்தகைய செயல்கள் ஏட்டில் எழுதப்பட்ட கனவுகளாகவே முடிந்ததே என்று மரம் வருந்தியதாகக் கவிஞர் தமிழ் ஒளி கூறுகிறார். | 1<br>1 |
| 19 | **பெயரடை :**<br>ஒரு தொடரில் எழுவாயாக வரும் பெயர்ச்சொல்லுக்கு அடையாக வருவது பெயரடை ஆகும்.<br>**சான்று:** அன்பரசன் நல்ல பையன். - இத்தொடரில் நல்ல என்னும் சொல், அன்பரசன் என்னும் எழுவாய்க்கு அடையாய் வருகிறது. எனவே, இது பெயரடை. | 2<br>2 |
| 20 | **சோழர்காலக் குமிழித்தூம்பின் பயன்பாடு:**<br>❖ மழைக்காலங்களில் ஏரி நிரம்பும்போது நீந்துவதில் வல்லவரான ஒருவர் தண்ணீருக்குள் சென்று கழிமுகத்தை அடைந்து குமிழித்தூம்பை மேலே தூக்குவார்.<br>❖ அடியில் இரண்டு துளைகள் காணப்படும். அடியில் இரண்டு துளைகள் காணப்படும்.<br>❖ மேலே இருக்கும் நீரோடித் துளையிலிருந்து நீர் வெளியேறும்.<br>❖ கீழே உள்ள சேறோடித் துளையிலிருந்து நீர் சுழன்று சேற்றுடன் வெளியேறும். இதனால் தூர் வார வேண்டிய அவசியம் இல்லை. | 1<br>1<br>1<br>1 |
| | **பகுதி - இ**<br>**கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிக்க:** | **1x6=6** |
| 21 | **தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ்விடு தூது காட்டும் காரணங்கள்:**<br>➢ கிளி, அன்னம், விறலி, பணம், தந்தி, நெஞ்சம், தென்றல் என்று பல தூது வாயில்களைப் பற்றி அறிந்திருக்கிறோம்.<br>➢ தமிழை தூதுப் பொருளாக்கி அதன் இனிமை, இலக்கிய வளம், பாச்சிறப்பு சுவை, அழகு, திறம், தகுதி ஆகியவை தமிழ்விடுதூது மூலம் விளக்கப்படுகிறது.<br>**விண்ணப்பம்**<br>➢ தமிழ் அமிழ்தமாகவும், வீடுபேற்றைத் தரும் கனியாகவும், இயல், இசை, நாடகம் என மூன்றாய்ச் சிறந்து விளங்குகின்றது.<br>➢ அறிவால் உண்ணப்படும் தேனாக விளங்கும் தமிழே! உன்னிடம் நான் மகிழ்ந்து விடுக்கும் வேண்டுகோளினைக் கேட்பாயாக<br>**பெருமை**<br>➢ உன்னிடமிருந்து குறவஞ்சி, பள்ளு போன்ற சிற்றிலக்கியங்களும், தாழிசை, துறை, விருத்தம் போன்ற மூவகைப் பாவினங்களிலும் புலவர்கள் பாடக் கைவரப் பெற்றவர்கள்<br>➢ சிந்தாமணியாய் இருக்கும் உன்னைச் சிந்து எனக் கூறும் உன் பெருமைக்கு வேறு யாரும் உள்ளனவோ.<br>**குணங்கள்**<br>➢ வானத்தில் வசிக்கும் முற்றும் உணர்ந்த தேவர்கள் கூடச் சத்துவம், இராசதம், தாமசம் என்னும் மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள்.<br>➢ ஆனால், நீயோசெறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், | 1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| | உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் பத்துக் குணங்களையும் பெற்றுள்ளார்<br>**வண்ணங்கள்**<br>➢ மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என ஐந்திற்கு மேல் இல்லை<br>➢ நீயோ புலவர்கள் கண்டடைந்த குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடைமெல்லிசை வண்ணம் ஈறாக நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளாய்.<br>**சுவைகள்**<br>➢ நாவின் மீது பொருந்தும் குறைபாடுடைய உணவின் சுவைகள் ஆறுக்கு மேல் இல்லை<br>➢ நீயோ செவிகளுக்கு விருந்தளிக்கும் ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய்<br>**அழகு**<br>➢ தமிழை அடையப் பெறாத மற்றையோர்க்கு அழியாத அழகு ஒன்றே ஒன்று அல்லாமல் அதிகம் உண்டோ? நீயோ நீங்காத அம்மை முதலிய அழகு எட்டினைப் பெற்றுள்ளாய். எனவே தமிழே தூது அனுப்பச் சிறந்தது என்பது இதன் மூலம் புலப்படுகிறது. | 1<br><br>1<br><br>1 |
| | **(அல்லது)** | |
| | **பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பு:**<br>**காவிரியின் வளம்**<br>காவிரி ஆறானது மலையிலிருந்து தேன் நிறைந்த பூக்களை அடித்துக்கொண்டு நீர்நிலைகள் நிறைந்த சோழ நாட்டை வளப்படுத்தும் வகையில் கால்வாய்களில் பரந்து எங்கும் ஓடுகிறது.<br>**சங்குகள் இடறின**<br>பயிர் வளர்ந்ததும் களைகளைக் களைந்து செல்லும் உழத்தியரின் கால்களில் குளிர்ந்த முத்துகளை ஈனும் சங்குகள் இடறின. அதனால் இடை தளர்ந்து வண்டுகள் மொய்க்கும் கூந்தல் அசையுமாறு மென்மையான நடந்து அருகில் உள்ள வரப்பினை அடைவர்.<br>**நீர்நிலைகள்**<br>காடுகள் உள்ள கரும்புகளிலும், செடிகளிலும் அரும்புகள் வளர, கரிய குவளை மலர்கள் மலர்ந்தன.<br>வயல்களில் சங்குகள் கிடந்ததால் கரையெங்கும் அன்னங்கள் உலவுகின்றன. நீர் நாடு என்று சொல்லும் அளவுக்குச் செழிப்பு மிக்கதால் இதுபோன்ற சிறப்பு பிற நாடுகளுக்கு இல்லை என்பர்.<br>**வானவில் போன்ற காட்சி**<br>அன்னப் பறவைகள் விளையாடும் நீர எருமைகள் வீழ்வதால், அங்குள்ள வாளை மீன்கள் துள்ளி எழுந்து உள்ள பாக்கு மரங்களின் மீது பாயும். இக்காட்சி நிலையான வானத்தில் தோன்றி மறையும் வானவில்லைப் போன்று விளங்கும்.<br>**குவியல்கள்.**<br>அரியப்பட்ட செந்நெல்லின் குவியல்.<br>மிகுதியாகப் பிடிக்கப்பட்டட பல்வகை மீன்கள் குவியல்.<br>வளைந்த சங்குகள் ஈன்ற முத்துக் குவியல்.<br>தேன் வடியும் வண்ண மலர்க்கவியல், போன்றவைத் திருநாட்டில் குவிந்து கிடக்கும்.<br>**புதுக்காட்சி**<br>நெல்கற்றைகள் குவிந்த பெரிய மலைபோன்ற போரை பெரிய வண்டிகளைச் செலுத்தும் கருமையான எருமைக்கூட்டங்கள் வலமாகச் சுற்றிச்சுற்றி மிதிக்கும். இத்தோற்றமானது கரிய மேகங்கள் பொன்மாலைச் சாரல் மீது வலமாகச் சுற்றும் காட்சிபோல் உள்ளது.<br>**மரங்கள்**<br>தென்னை, செருந்தி, நரந்தம், அரசு, கடம்பம், பச்சிலை, மரம், குரம், பனை சந்தனம், நாகம், காஞ்சி,வஞ்சி, கோங்கு முதலிய மரங்கள் எங்கெங்கும் செழித்து வளர்ந்துள்ளன. | 1<br><br>1<br><br>1<br><br>1<br><br>1<br><br>1 |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | |
|---|---|---|
| | பிரிவு - IV<br>பகுதி - அ | 1x4=4 |
| 22 | **நயம் பாராட்டல்:**<br>**ஏற்ற நயங்கள் இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்** | 4 |
| | **பிரிவு - V**<br>**கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு அரைபக்க அளவில் விடையளிக்க** | 1x6=6 |
| 23 | **கனவெல்லாம் கலாம்**<br>**நூலின் தலைப்பு :**<br>அன்று இந்தியாவை அறியாதவர்கள்கூட காந்தியடிகளை அறிந்து இருந்தார்கள். காந்தி தேசத்தில் இருந்து வருகிறீர்களா! என்பார்கள். இன்று இந்தியாவை அறியாதவர்களும் மாமனிதர் அப்துல் கலாம் அவர்களை அறிந்து இருக்கிறார்கள். கலாம் தேசத்திலிருந்து வருகிறீர்களா? என்பார்கள். இந்தியாவின் அடையாளமாக, தமிழர்கள் பெருமையாக அறியப்பட்ட அப்துல்கலாம் அவர்களின் தகவல் களஞ்சியம் தான் இந்த **'கனவெல்லாம் கலாம்'** இந்நூலின் தலைப்பாகும்.<br>**நூலின் மையப் பொருள் :**<br>நூலாசிரியர் தமிழ்தேனீ முனைவர் இரா. மோகன் கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றி உற்று நோக்கி மாமனிதர் அப்துல்கலாம் பற்றி வந்த தகவல்கள், கட்டுரைகள், கவிதைகள் அனைத்தையும் தொகுத்து வகுத்து உள்ளார். அப்துல் கலாம் பற்றி அறிந்து கொள்ள விரும்பும் அனைவரும் படிக்க வேண்டிய நூல் 'கனவெல்லாம் கலாம்'. நூலைப் படித்தால் வாசகர்கள் கனவெல்லாம் கலாம் வருவார்கள்.<br>மாமனிதர் அப்துல் கலாம் அவர்களின் வெற்றிக்குக் காரணங்கள் எளிமை, இனிமை, நேர்மை, அவர் உலகம் பொதுமறையை ஆழ்ந்து படித்ததோடு இருந்து விடாமல் அதன்படி வாழ்ந்த காரணத்தால் உலகப் புகழ் ஈட்டினார் என்பதே உண்மை அதனை இந்நூலில் நன்கு உணர்த்தி உள்ளார். 1. காணிக்கைக் கட்டுரைகள், 2. இரங்கல் செய்திகள். 3. கவிதை மாலை, 4. கலாம் அலைவரிசை, 5. கலாம் கருவூலம் என ஐந்து தலைப்புகளில் நூலை வடிவமைத்து உள்ளார்.<br>**நூலின் நயம் :**<br>பேராசிரியர் தி.இராசகோபாலன் தொடங்கி கவிக்கோ. அப்துல் ரகுமான், தமிழர் தலைவர் பழ.நெடுமாறன், தினமலர் ஆசிரியர், இரா.கிருஷ்ணமூர்த்தி, தினமணி ஆசிரியர் வைத்தியநாதன், புதிய தலைமுறை ஆசிரியர் மாலன், எழுத்தாளர் சிவசங்கரி, முதுமுனைவர். வெ.இறையன்பு ஆகியோர் வரிசையில் என்னுடைய கட்டுரையும், கவிதையும் இந்த நூலில் இடம் பெற்று இருப்பது மனமகிழ்ச்சி மட்டுமல்ல, பெருமையாகவும் இருந்தது. முன்னணி நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் மட்டுமல்ல சிற்றிதழ்கள் வரை கலாம் பற்றிய தகவல்களைத் தேனீ போலவே தேடித்தேடி தொகுத்து உள்ளார்கள். தோரண வாயிலில் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளது உண்மை.<br>பொதுவாக ஒரு தொகை நூலைப் பொருத்த வரையில் தேடித் தொகுப்பதுகூட அத்தனை அரிய செயல் அன்று; ஆனால் தொகுத்தவற்றை எல்லாம் வகுத்து முறைப்படுத்துவது என்பது அரிதினும் அரிதாகும். அதற்குள் சொந்தமாக தனிநூலை நாம் எழுதி விடலாம். இம்முயற்சியில் எனக்குத் தோன்றிய துணையாக இருந்து வலதுகரமாக செயல்பட்டவர் என வாழ்க்கைத் துணைவியர் பேராசிரியர் நிர்மலா. | 6 |
| | **(அல்லது)** | |
| | **வரவேற்பு மடல்**<br>இடம், நாள்<br>விளித்தல்<br>செய்தி<br>இப்படிக்கு | 6 |

www.Padasalai.Net www.TrbTnpsc.com

| | பிரிவு - VI<br>கீழ்காணும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி: | 1x6=6 |
|---|---|---|
| | **வளரும் செல்வம் என்ற தலைப்பில் ஆசிரியர் கூறும் கருத்து:**<br>❖ **முன்னுரை**<br>தமிழ் மொழி பிறமொழிச் சொற்களை அப்படியே ஏற்பதில்லை என்பது மரபு. அந்த வகையில் கலைச் சொல்லாக்கத்திற்கான பணிகள் இன்று முதன்மை பெற்றுள்ளன. இதுவே மொழி வளர்ச்சிக்கான வாயிலாகவும் உள்ளது. சொற்கள் புலப்படுத்தும் வரலாறு. பண்பாடு ஆகியவற்றை இத்துணைப்பாடத்தின் வழிக்காண்போம்<br>**தமிழெண்கள்:**<br>❖ கணிதத்தில் ஒன்று, பத்து, ஆயிரம் ஆகிய எண்ணிக்கையிலான தமிழ்ச்சொற்கள் நமக்குத் தெரியும். ஆனால் 1-320 , 1-160 ஆகிய எண்ணிக்கைகளுக்கான சொற்களைக் கால மாற்றத்தில் கைவிட்டோம். நாம் நினைத்தால் அவற்றை மீட்டெடுக்கலாம்.<br>**கலைச்சொற்கள்:**<br>❖ தாய்மொழி சார்ந்த சொற்களின் எண்ணிக்கையைவிட வேற்றுமொழிச் சொற்களின் எண்ணிக்கை மிகுதியாகும். எனவே தான் நம் வாழ்க்கையில் இடம்பெறும் அறிவியல் கருத்துகளுக்குக்காக கலைச்சொற்களை எல்லாம் நம் மொழியிலும் உருவாக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. அத்தகைய கலைச்சொற்களை ஒலிபெயர்ப்புச் செய்தோ மொழிபெயர்ப்புச் செய்தோ உருவாக்கவும்.<br>**கடல்துறை:**<br>❖ உலகில் தொன்மை மொழியாகவும் செவ்வியல் மொழியாகவும் திகழ்வது கிரேக்க மொழியாகும். இம்மொழியின் கடல்சார்ந்த சொற்களில் எறிதிசை (எறுதிரான்), கலன் (கலயுகோய்), (நீரியோஸ்), (நீரிய), நீர். நாவாய்(நாயு), (தோணீஸ்) போன்ற தமிழ்ச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. இதுபோலப் பல்வேறு துறைசார்ந்த தமிழ்ச்சொற்களும் வேற்று மொழிகளுக்கும் சென்றுள்ளன.<br>❖ **பா:** கவிதை சார்ந்த சொற்களைத் தமிழிலும் கிரேக்க மொழியிலும் ஒப்பாகக் காணமுடிகிறது. பா வகைகளும் ஒன்று வெண்பா, அதன் ஓசை செப்பலோசை ஆகும். கிரேக்கத்தில் வெண்பா வடிவப் பாடல்கள் சாப்:போ என அழைக்கப்படுகின்றன. பாவின் சுவைகளில் ஒன்று இளிவரல் என்ற துன்பச் சுவையினைத் தமிழிலக்கணங்கள் சுட்டுகின்றன. கிரேக்கத்தில் துன்பச் சுவையுடைய பாடல்கள் இளிகியா என அழைக்கப்படுகின்றன.<br>**தமிழ்ச்சொற்கள் பிறமொழியில்:**<br>❖ கிரேக்கத்திலிருந்து தமிழ்நாட்டிற்குக் கடல் வழியாக வருவதைனைக் கிரேக்க நூலொன்று விளக்குகிறது. எறிதிரேசியன் ஆப் த பெரிபுலஸ், என்னும் நூலின் பெயரிலேயே தமிழ்ச்சொல் எறிதிசை இருப்பதைக் காணலாம். கடல்சார்ந்த பெரிய புலம் என்பதே எறிதிரேசியன் ஆப் த பெரிபுலஸ், என ஆகியுள்ளது. இதுபோலத் தொல்தமிழின் வளர்ச்சித் தொடரவும் நாம் செயல்படவேண்டும்.<br>**முடிவுரை**<br>வளர்ந்துகொண்டிருக்கும் அறிவியல் துறை கலைச் சொற்களை உடனுக்குடன் தமிழ்மொழியில் மொழி பெயர்த்து அத்துறைகளை மேலும் வளர்க்க வேண்டும். பிறமொழியிலுள்ள தத்துவம், அரசியல், மருத்துவம், பொறியியல், கணினி, விண்வெளி போன்ற பிற துறைகளின் பதிவுகள் எல்லாம் உடனுக்குடன் நம் மொழிக்குக் கொண்டு வரப்பட வேண்டும். நம்மொழியில் புதிய புதிய சொல்வளம் பெருகவேண்டும். | 6 |
| | **(அல்லது)** | |
| | **தண்ணீர்**<br>- **கந்தர்வன்**<br>**முன்னுரை**<br>கந்தவர்னின் இயற்பெயர் சாகலிங்கம். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இவர் தமிழ்நாடு அரசின் கருவூலமாகக் கணக்குத் துறையில் பணியாற்றியவர். சாசனம். ஒவ்வொரு கல்லாய், கொம்பன் முதலியவை | |

இவரது குறிப்பிடத்தக்க சிறுகதைத் தொகுப்பகள் ஆகும். இன்று நீர் நெருக்கடி உச்சத்தில் இருக்கிறது. குறிப்பாக சிற்றூர்களில் இந்த நெருக்கடி வாழ்க்கைச் சிக்காலகவே மாறிவருகிறது. இதை உணர்த்துவதாக அமைந்தது 'தண்ணீர்' சிறுகதை.

**ரயில் நிலையம்**

புகைவண்டி வரும் சத்தத்தைக் கேட்டதும் இந்திரா குடத்தைத் தூக்கிக்கொண்டு வேகமாக ஓடினாள். ஏழெட்டுப் பெண்கள் ஓடிவந்து இந்திராவை முந்தப் பார்த்தார்கள் . இரண்டு மூன்று குடங்களைத் தூக்கிக்கொண்டு புயல் நுழைவது போல் இரயில் நிலையத்துக்குள் பாய்ந்ததார்கள். இந்திரா படுகெட்டியான பெண், எல்லோருக்கும் முன்பாக இடம்பிடித்தாள். ஸ்டேஷன் மாஸ்டர் அவர்களைப் பார்த்துத் திட்டினார். அவர்கள் அதைக் கண்டு கொள்ளவில்லை.

**தண்ணீர்ப் பிடித்தல்**

இரயில், காட்டு யானை பிளிறிக்கொண்டு வருவது போல் நிலையத்திற்குள் நுழைந்தது. பயணிகள் யாரும் இறங்கும் முன்பாக இந்திரா குடத்தோடு ஏறி, முகம் கழுவும் பேசினில் தண்ணீர் பிடித்துக் குடத்தில் ஊற்றினாள். இது தான் அவர்களுக்கு இன்னும் சில நாட்களுக்குக் குடிநீர். இதுவும் இல்லையென்றால் பிலாப்பட்டிக்குப் போக வேண்டும்.

**நீரில்லாப் பூமி**

எல்லா ஊர்களிலும் தண்ணீர் இல்லை: புயல் வந்தால்தான் மழை பெய்யும். ஊருணி எல்லாம் உடைப்பெடுத்து வெள்ளம் போய் மூன்றாம் நாள் மறுபடியும் நீரில்லாப் பூமியாகக் கிடக்கும்.

**நீரில்லாத் தண்ணீர்**

மூணு மைல் தூரம் நடக்க வேண்டும் பிலாப்பட்டியில் நல்ல தண்ணீர்க் கிணறு, ஊற ஊறத்தான் இறைக்க வேண்டும். மதியம் வரை பிலாப்பட்டி ஜனம் மட்டும் இறைத்துக்கொலள்ளும். மதியத்திற்கு மேல் வெளியூர் மக்கள் இறைத்துக்கொள்ளலாம். வெளியூர் மக்கள் கால்கடுக்க நடந்து தான் தண்ணீர் எடுத்துவரவேண்டிய அவலம். 6

**ஓசத்தியான தண்ணீர்**

இரயில்களில் முந்தியடித்துக் கொண்டு பெண்கள் ஓடிவருவதால் பயணிகளுக்குப் பல இடையூறுகள் . ஸ்டேசன் மாஸ்டர் இதை விரும்பவில்லை. ஆனாலும் ஊர்மக்கள் அவரிடம் பேசி இந்த ஏற்பாடு செய்தனர். இரயில் வரும்போது தான் வர வேண்டும். வந்து பயணிகளுக்கு இடையூறு இல்லாமல் தண்ணீர்ப் பிடிக்க வேண்டும். எது எப்படியோ எல்லாத் தண்ணீரையும் விட இந்தத் தண்ணீர் ஓசத்தியுள்ளது.

**இரயில் புறப்பாடல்**

இன்ஜினிலிருந்து ஊதல் ஒலி வந்தது. ரயில் நகர்கிற மாதிரி இருந்தது. இன்னும் கொஞ்சம் பிடித்துக் குடத்தில் ஊற்றிவிட்டுக் குதித்துவிடலாம் என்று நினைத்துக்கொண்டே உள்ளங்கையை மேலும் அழுத்தினாள், ரயிலின் வேகம் அதிகரிக்க குடத்தைப் பாதையில் வைத்துவிட்டுக் குதிக்கப் போனாள். வடநாட்டுப் பெண்ணொருத்தி "தற்கொலை பண்ணிக் கொள்ளப் பார்த்தாயா" என்று இந்திராவைத் தடுத்துவிட்டாள்.

**இந்திராவைத் தேடல்**

இரயில் சென்றும் வீடு வராத இந்திராவைப் பெற்றோர், உற்றார் பல இடங்களில் தேடினார்கள். இறுதியாக இராமநாதபுரம் போகும் பேருந்தில் ஏறிப் பாசஞ்சர் இரயிலைப் பிடிக்கச் சென்றனர். நிலையத்தை அடைந்தவர்கள் குடத்தோடு ஒரு பெண்ணு எறங்குச்சா என்று இரயில் நிலையத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எல்லோரிடமும் விசாரித்தார்கள். திரும்பி வந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசினார்கள்.

**இந்திரா திரும்பி வரல்**

சற்று நேரம் கழித்து இந்திராவின் தாய் இரயில் நிலையத்துக்கு ஓடினாள். பின்னாலேயே ஊர்மக்களும் ஓடினார்கள். பத்தடி தூரம் ஓடியதும் அம்மா முதலில் கத்தினாள். "அந்தா இந்திரா வருது" இடுப்பில் தண்ணீர்க் குடத்தோடு இந்திரா கூட்டத்தருகில் வந்தாள். மகள் வந்து சேர்ந்ததும் ஐயா

| | | |
|---|---|---|
| | கேட்டார். பயமகளே இதையும் செமந்து கிட்டா வரணும் இத்தனை மைலுக்கும்? இந்திரா சொன்னாள் " நாளைக்கு வரை குடிக்க எங்கே போறது".<br>**முடிவுரை:**<br>தண்ணீரின் இன்றியமையாமையையும் தேவையையும் 'தண்ணீர்' என்ற கதையின் மூலமாகக் குறிப்பாக இந்திராவின் கதாப்பாத்திரம் மூலம் நமக்குப் படம்பிடித்துக் காட்டியுள்ளார் கவிஞர் காந்தர்வன். எனவே தண்ணீரின் தேவையையும் அதன் பயன்பாட்டையும் அறிந்து அவற்றைச் சிக்கனமாகச் செலவிட முயற்சிப்பதோடு தண்ணீரைச் சேமிக்கவும் செய்வோம்.<br>**"இன்றைய சிக்கனமும் சேமிப்பும்**<br>**நாளை மக்களின் வாழ்வாதாரம்"** | |

SHRI KRISHNA ACADEMY

✍ CREATIVE QUESTIONS ,MATERIALS(GUIDE), FULL TEST QUESTION PAPERS, ONE MARK TEST QUESTION PAPER for X, XI, XII AVAILABLE in ALL SUBJECTS.

→ For MORE DETAILS - 99655 31727 , 9965782883

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி